இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 26 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 20 – வெள்ளிக்கிழமை 05 செப்டம்பர் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 26 : Thiruvalluvar Year - 2056 - Aavani 20 - Friday 05 September 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## அயல்நாட்டிலிருந்து அன்பு உடன்பிறப்புகளுக்கு..

# தமிழ் மணம் வீசிய ஜெர்மனி!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் வெளிநாட்டிலிருந்து எழுதும் மடல்.**

ஜெர்மனியிலிருந்து இங்கிலாந்து தலைநகர் இலண்டனுக்கு விமானத்தில் பறந்து செல்லும் நேரத்தில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு இரட்டை இலக்கத்திலான பொருளாதார வளர்ச்சியைப் பெற்று முதலிடத்தில் இருப்பதுடன், இந்தியாவிலேயே தொழிற்சாலைகள் அதிகமுள்ள மாநிலமாகவும், வேலை வாய்ப்புகளை 15% வழங்கும் இந்தியாவின் முதன்மை மாநிலமாகவும் திகழ்கிறது என்கிற ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களை உடன்பிறப்புகள் அறிந்திருப்பீர்கள்.

**உங்களின் வாழ்த்துகளுடன் பயணம்**



ஒரு டிரில்லியன் டாலர் என்கிற பொருளாதார இலக்குடன் திராவிட மாடல் அரசு தொடர்ந்து முன்னேறி வருகிறது. அந்த முன்னேற்றத்தை மேலும் விரைவுபடுத்தி, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளும் சீரான வளர்ச்சியைப் பெறுகிற வகையில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகத்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் ஆகஸ்ட் 30 அன்று ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினேன். சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, “2021 முதல் இதுவரை 10 இலட்சத்து 62 ஆயிரத்து 752 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்து, 32 இலட்சத்து 81 ஆயிரத்து 32 பேருக்கு வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன” என்பதையும், இதுவரை நான் பயணம் மேற்கொண்ட ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின், அமெரிக்கா ஆகிய நாடுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களையும் அவற்றில் முழுமையடைந்த திட்டங்கள், செயல்பாட்டில் உள்ள திட்டங்கள், உருவாகியுள்ள வேலை வாய்ப்புகள் என அனைத்தையும் புள்ளி விவரங்களுடன் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் ஊடகத்தினரின் உள்ளன்பான வாழ்த்துகளையும் பெற்று விமான நிலையத்தின் அண்ணா பன்னாட்டு முனையத்திற்கு வந்தேன்.

அங்கு எமிரேட்ஸ் விமான சேவையின் 25-ஆம் ஆண்டு விழா கேக் வெட்டும் நிகழ்வில் பங்கேற்கும் வாய்ப்பு அமைந்தது. மாண்புமிகு துணை முதலமைச்சர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களும் உடனிருந்தார். எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துவிட்டு, நானும் என் துணைவியாரும், அரசு அதிகாரிகள் மற்றும் உதவியாளர்களுடன் விமானத்தில் துபாய் வழியாக ஆகஸ்ட் 30 சனிக்கிழமை இரவு ஜெர்மனியில் NRW எனப்படும் நார்த்ரைன் – வெஸ்ட்பாலியா மாநிலத்தின் தலைநகரான டசெல்டோர்ஃப் விமான நிலையத்தில் தரையிறங்கினோம்.

**அன்புடன் வரவேற்ற ஜெர்மனி**



தமிழ்நாட்டிற்கான வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக உங்களில் ஒருவனான என் வழிகாட்டுதலின்படி முன்கூட்டியே ஜெர்மனி நாட்டிற்கு வந்திருந்த மாண்புமிகு தொழில் – முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சரான தம்பி டி.ஆர்.பி.ராஜா விமான நிலையத்தில் அன்புடன் வரவேற்றார். NRW மாநில அரசின் சார்பாகத் தூதரக விவகாரங்கள் மற்றும் அரசு முறை வரவேற்புப் பிரிவைச் சார்ந்த திருமிகு அன்யா டி வூஸ்ட், பெர்லினில் உள்ள இந்திய தூதரகத்தின் பொறுப்பாளர் திரு.அபிஷேக் துபே, ஃப்ராங்க்பர்ட் இந்திய துணைத் தூதரகத்தின் துணைத் தூதர் பொறுப்பில் உள்ள திரு.விபா காந்த் ஷர்மா ஆகியோர் மகிழ்வுடன் வரவேற்றனர்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு பெரும் பங்களிப்பைச் செலுத்தி வரும் நிலையில், ஜெர்மனி நாட்டில் உள்ள இந்திய அதிகாரிகளின் வரவேற்பு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. அந்த மகிழ்ச்சியுடன் டசெல்டோர்ஃப் விமான நிலையத்திலிருந்து வெளியே வந்தபோது ஓர் இன்ப அதிர்ச்சி.

**உங்களில் ஒருவன்**

அந்தப் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் குடும்பம் குடும்பமாக வந்து நின்று வரவேற்பளித்தனர். குழந்தைகள் பதாகை ஏந்தி அன்பைப் பொழிந்தனர். அவர்களின் பாசம் மிகுந்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு, குழந்தைகளின் படிப்பு உள்ளிட்ட விவரங்களைக் கேட்டுவிட்டு, கொலோன் நகரில் உள்ள 120 ஆண்டு பெருமையுள்ள எக்ஸல்ஸியர் ஹோட்டலுக்கு வந்தோம்.



**ரைன் நதிக் கரையினிலே..**

புகழ்பெற்ற ரைன் நதியின் கரையோரமாக அது கட்டப்பட்டுள்ளது. கொலோன் நகரின் அந்த ரைன் நதிக்கரையில்தான் வட ஐரோப்பாவின் பழமையானதும் உயரமானதுமான தேவாலயம் ஒன்று உள்ளது.

நாங்கள் ஹோட்டலுக்குச் சென்ற அன்றைய இரவு நேரத்திலும் ஹோட்டல் பகுதியிலும் தெருக்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தனர். என்ன விவரம் என்று கேட்டேன். லைட்ஷோ என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள். கொலோன் நகரில் நடந்த வாணவேடிக்கைகளை ரசித்தபோது மனதெங்கும் தமிழ்நாட்டின் நினைவுகள் மத்தாப்புகளாகச் சிதறின.

மறுநாள் காலையில் எழுந்ததும், அந்த இனிய வேளையில் ரைன் நதிக் கரையோரமாக நடைபயிற்சியை மேற்கொண்டேன். முந்தைய இரவுதான் அங்கே பெருங்கூட்டத்துடன் வாணவேடிக்கை நடந்தது. தின்பண்டங்களுடன் மக்கள் அதனை இரசித்தபடி இருந்தனர். ஆனால், அப்படியொன்று நடந்ததற்கான சுவடே தெரியாமல் அவ்வளவு தூய்மையாக அந்தப் பகுதி இருந்தது. கொலோன் நகர நிர்வாகத்தின் விரைவான தூய்மையான பணியை வியந்தபடி நடைபயிற்சி சென்றேன். ஜெர்மனியர்கள் பலரும் நடைபயிற்சி, ஓட்டப்பயிற்சியை



சென்னை விமான நிலையத்திலிருந்து ஜெர்மனிக்குப் புறப்பட்ட காட்சி!

மேற்கொண்டிருந்தனர். காலை நேரத்தில் நம் பணிகளுக்கான முதல் ஊக்கமாக அமைவது இத்தகைய பயிற்சிதான் என்ற விழிப்புணர்வுடன் அவர்கள் உடல் கட்டமைப்பை சீராக வைத்திருப்பதைப் பார்த்தேன்.

சென்னையில் இருந்தாலும், தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்தாலும், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளுக்கு வந்தாலும் காலை நேரத்தில் நடைபயிற்சியை மேற்கொள்வதை உங்களில் ஒருவனான நான் வழக்கமாக வைத்திருக்கிறேன். பொதுவாழ்வுப் பணிகளில் ஏற்படும் களைப்பு சலிப்பு எதுவும் என்னை நெருங்கவிடாமல் தொடர்ந்து உழைப்பதற்கு அது ஊக்கசக்தியாக உள்ளது. அன்பு உடன்பிறப்புகளும் நடைபயிற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு, உடல்நலன் காத்து, உங்கள் குடும்பத்திற்கும் கழகத்திற்கும் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன்.


**கவனமெல்லாம் தமிழ்நாட்டில்**

நடைபயிற்சியில் என்னுடன் வந்த தம்பி டி.ஆர்.பி.ராஜா ஜெர்மனியில் எந்தெந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வமாக இருக்கின்றன, அந்த நிறுவனங்கள் என்ன உற்பத்தி செய்கின்றன, அவற்றின் பின்னணி என்ன என்பது உள்ளிட்ட விவரங்களைச் சொல்லிக்கொண்டே வந்தார். அவற்றைக் கவனமாகக் கேட்டுக்கொண்டதுடன், என்னுடைய செயலாளரிடம், தமிழ்நாட்டின் நிலவரங்கள் குறித்து கேட்டேன்.

சென்னையில் அன்றைய இரவு கடுமையான மழை பெய்த விவரம் அறிந்ததும், மாநகராட்சி கமிஷனருக்கு போன் செய்து கேட்டபோது, மணலியில் மட்டும் 27 செ.மீ. மழை பெய்தது என்றும், சென்னையின் பல இடங்களிலும் இரவில் கடும் மழை என்றும் தெரிவித்ததுடன், எந்தப் பகுதியிலும் தண்ணீர் தேங்கவில்லை என்பதையும், சுரங்கப்பாதை எதுவும் மூடப்படவில்லை என்பதையும் தெரிவித்தனர். அதிகாரிகள் குமரகுருபரன், கார்த்திகேயன் மற்றும் சென்னை மாநகராட்சி நிர்வாகத்தினர் களத்தில் நின்று, மழை அதிகமாகப் பெய்த இடங்களில் தண்ணீரை உடனடியாக வெளியேற்றும் பணிகளை முழுமையாக நிறைவேற்றியதைத் தெரிவித்தனர்.

துணை முதலமைச்சர் தம்பி உதயநிதிக்கு போன் செய்து, சென்னையில் இரவு பெய்த கனமழை பற்றிய விவரம் கேட்டபோது, அவர் அனைத்துத் துறைகளுடனும் தொடர்புகொண்டு பணிகளை விரைவுபடுத்தியதையும், சென்னையில் எங்கும் தண்ணீர் தேங்கவில்லை என்பதையும் தெரிவித்தார். **எந்த நாட்டில், எந்த நகரில் இருந்தாலும் உங்களில் ஒருவனான என் மனது தமிழ்நாட்டைத்தான் சுற்றிச் சுழல்கிறது.**

அந்த நேரத்தில், மனதை பாரமாக்கும் வகையில் அண்ணன் வீரபாண்டியார் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி. லீலா ஆறுமுகம் அவர்கள் மரணமடைந்த செய்திவந்தது. உடனே, வீரபாண்டியாரின் மகன் தம்பி பிரபுவைத் தொடர்பு கொண்டு இரங்கலைத் தெரிவித்து, ஆறுதல் கூறினேன். நடைபயிற்சி முடித்து, ஒரு காபி சாப்பிட்டுவிட்டு ஹோட்டலுக்குத் திரும்பி, அன்றைய சந்திப்புகளைத் தொடர்ந்தேன்.



ஜெர்மனியில் தமிழ் பெருமக்கள் வரவேற்பு!

தொடர்ச்சி 3ஆம் பக்கம்